## மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம்,அன்னூர்.

## O.S.No. 358/ 2023

2024 ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள், செவ்வாய்க்கிழமை 06-ம் நாள் என்பவரது சாட்சிய வாக்குமூலம் (1873 ம் ஆண்டு 10 வது பிரிவின் ஏற்பாட்டின்படி) திருமதி. வெ.மோனிகா, பி.ஏ.,பி.எல்.,எல்.எல்.எம்., மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிபதி, அன்னூர் என்பவரால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | சிவசாமி | வயது | 70 |
| க.பெ./த.பெ. | ராமசாமி | தாலூக்கா | அன்னூர் |
| கிராமம் | செலம்பரகவுண்டன்புதுர் | மாவட்டம் | கோவை |
| தேதி | 06.08.2024 | PW -1 | |

**முதல் விசாரணை**

நான் இவ்வழக்கில் 1ம் வாதி. இவ்வழக்கில் என் தரப்பு முதல் விசாரணையை இந்த வழக்கு மாறுதல் ஆவதற்கு முன்பே கோவை நீதிமன்றத்தில் எழுத்துமூல நிருபண பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். அதில் கண்டுள்ள சங்கதிகள் எனக்கு தெரியும். நிருபண வாக்குமூலத்தில் கண்டுள்ள கையெழுத்து என்னுடையதுதான். எனவே அதனை எனது முதல் விசாரணையாக பாவிக்குமாறு கேட்டுகொள்கிறேன். எனது தரப்பு ஆவணங்களாக கீழ்கண்ட ஆவணங்களை குறியீடு செய்ய வேண்டுகிறேன்.

| | | |
|---|---|---|
| **வா.சா.ஆ.1** | 23.05.1985 | நானும் பிரதிவாதியும் செய்து கொண்ட பாக சாசன பத்திர எண். 843/1985 - சான்று நகல். |
| **வா.சா.ஆ.2** | 11.04.1987 | UDR பட்டா எண். 275 - அசல். |
| **வா.சா.ஆ.3** | 05.05.2014 | கணினி பட்டா எண். 275 – சான்று நகல். |
| **வா.சா.ஆ.4** | 08.05.2014 | அடங்கல் - சான்று நகல். |

| | | |
|---|---|---|
| **வா.சா.ஆ.5** | 05.05.2014 | கணினி தரவிறக்கம் செய்யப்பட்ட அ பதிவேடு - சான்று நகல். |
| **வா.சா.ஆ.6** | 15.04.2004 | இணைப்பு எண். 279 ற்கான மின் கட்டண ரசீது - அசல் |
| **வா.சா.ஆ.7** | | இணைப்பு எண். 279 ற்கான மின் கட்டண அட்டை-அசல் |
| **வா.சா.ஆ.8** | 08.04.1989 | கந்தாய ரசீது - அசல். |
| **வா.சா.ஆ.9** | 18.02.2003 | கந்தாய ரசீது - அசல். |
| **வா.சா.ஆ.10** | | வழக்கு சொத்தை காட்டும் புகைப்படங்கள் - 15 எண்ணிக்கைகள் அசல். (இந்திய சாட்சிய சட்டம் பிரிவு 65 ன் கீழான சான்று வழக்கு தாக்கல் செய்த போதோ அதற்கு பின்னிட்டோ தாக்கல் செய்யவில்லை என்ற ஆட்சேபணையோடு இந்த ஆவணம் குறியீடு செய்யப்படுகிறது.) |
| **வா.சா.ஆ.11** | 28.02.2013 | என் மனைவி பெயரிலுள்ள தான செட்டில்மென்ட் பத்திர எண். 1247/2013 - அசல். |
| **வா.சா.ஆ.12** | 04.05.2018 | என் மனைவி பெயருக்கு செய்து கொடுத்த தான செட்டில்மென்ட் ரத்து பத்திர எண். 1618/2018 - அசல். |

எனது சாட்சியத்தினை ஏற்றுக் கொண்டு தாவாப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

**பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை**

(வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது)

Take down by me/before me in open Court, interpreted/read over to the Witness and admitted by the deponent to be correct.